Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: தமிழ் இலக்கிய நயம்

வாரம் - 1

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியர் R.யசந்தன்
கே/ உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

**01. 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1. "திங்கள் மாலை வெண்குடையான்
   சென்னி செங்கோலது ஓச்சி"
   அ. இங்கு சென்னி என்று அழைக்கப்படுபவன் யார்?
   ஆ. அவரது ஆட்சிச்சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

2. "இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
   இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை"
   அ. சுவடிச்சாலை எனப்படுவது யாது?
   ஆ. இக்கவிதை எழுதிய ஆசிரியரின் இயற்பெயர் என்ன?

3. "உடைநீரோதை தண்பதங்கொள்
   விழவரோதை சிறந்தார்ப்ப…"
   அ. இப்பாடலடி இடம்பெற்ற இலக்கியம் என்ன? அதனை எழுதியவர் யார்?
   ஆ. தண்பதங்கொள் விழவரோதை என்பதால் கருதப்படுவது யாது?

4. "தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கி
   சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்"
   அ. இங்கு இடம்பெறும் அணி ஒன்றினை குறிப்பிட்டு விளக்குக
   ஆ. "சகமக்கள் ஒன்றென்பதுணர்வதற்கும்" எனும் அடிகளின் ஊடாக வெளிப்படுத்தப்படும் மனிதப்பண்பு யாது?

5. வாழ்க்கை பற்றி டார்வின் கூறிய கருத்தினை தருக?

02. பின்வரும் பாடலை படித்து அதன் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை எழுதுக

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோலது ஓச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாதொழிதல் கயல்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி

மன்னுமாலை வெண்குடையான்
வளையாச் செங்கோ லதுஓச்சி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாது ஒழிதல் கயல்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி

அ) இப்பாடப்பரப்பின் ஊடாக ஆசிரியர் எடுத்துக்காட்ட விரும்புகின்ற செய்தி யாது?
ஆ) சோழமன்னனின் ஆட்சிச்சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
இ) காவேரி சோழனோடு வெறுப்புறாதிருப்பதற்கான காரணமாக கூறப்படுவது யாது?
ஈ) இப்பாடல் பரப்பில் இடம்பெறுகின்ற அணிகளை இனங்கண்டு விளக்குக?